**தலைப்பு 223 – இலங்கை கடற்படை தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 223 - இலங்கை கடற்படையின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, களஞ்சிய முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 யூலை 21 ஆந் திகதி கடற்படைத் தளபதிக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, களஞ்சிய முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2 கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

---

இலங்கை கடற்படைக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 58,043 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 57,043 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, இலங்கை கடற்படைக்கு ஒதுக்கப்பட்டிருந்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான ரூபா 1,000 மில்லியன் அதாவது 1.72 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 48,188 | 48,026 | 162 | 0.34 |
| மூலதனம் | 9,855 | 9,017 | 838 | 8.50 |
| மொத்தம் | 58,043 | 57,043 | 1,000 | 1.72 |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்**

பல்வேறு கருமங்களுக்காக 03 அமைச்சுக்கள் மற்றும் 03 திணைக்களங்களினால் ரூபா 1,877.12 மில்லியன் கூட்டுமொத்தமான நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 514.12 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தன. அதற்கிணங்க, ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளிலிருந்தான ரூபா 1,363 மில்லியன் அதாவது 72.61 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| நிதி ஏற்பாட்டை வழங்கிய அமைச்சு /திணைக்களம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | |
|---|---|---|---|
| | நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| பாதுகாப்பு அமைச்சு | 474.00 | 456.00 | 18.00 |
| போக்குவரத்து அமைச்சு | 9.00 | 9.00 | - |
| நிதி அமைச்சு | 92.00 | 31.00 | 61.00 |
| சனாதிபதி செயலகம் | 72.00 | 18.00 | 54.00 |
| ஓய்வூதியத் திணைக்களம் | 1,230.00 | - | 1,230.00 |
| இலங்கை விமானப் படை | 0.12 | 0.12 | - |
| மொத்தம் | **1,877.12** | **514.12** | **1,363.00** |

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

#### (அ) பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

இலங்கை கடற் படைக்குரிய 22301 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடியான வை | அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 640.00 | 533.08 | 480.00 | 624.54 | 900.00 | 342.81 |

### 2.2.2 களஞ்சிய முற்பணக் கணக்கு

#### (அ) பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

இலங்கை கடற் படைக்குரிய 22302 ஆம் விடய இலக்கத்தின் கீழ் களஞ்சிய முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை | குறைந்த எல்லை | உள்ளபடி யானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 345.00 | 343.91 | 360.00 | 509.95 | 350.00 | 150.11 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

இலங்கை கடற்படையின் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 7002/0000/00/0029/0015/000 ஆம் கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 58 மில்லியனாக இருந்தது.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

இலங்கை கடற்படையின் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 6000/0000/00/0015/0104/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கின் மீதி ரூபா 289 மில்லியனாக இருந்தது.

## 2.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

இலங்கை கடற்படையின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, களஞ்சிய முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளில் உள்ளடக்கப்பட்ட பொருண்மையான மற்றும் முக்கியமான அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணப்படாமை

இலங்கை கடற் படையினால் கீழே காட்டப்பட்டள்ள பதிவேடுகள் பேணப்பட்டிருக்காமை தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேட்டின் வகை | தொடர்புடைய பிரமாணம் |
|---|---|---|
| (i) | பிணை பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) |
| (ii) | மின்உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) |
| (iii) | சேதங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 |
| (iv) | கொள்வனவு மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுக்களின் வருகை பதிவேடு | அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டல் |

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.2.1 பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கடற்படைக்கு திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தினால் கட்டுநிதி வழங்கல் மட்டுப்படுத்தப்படல் மற்றும் தரைப்படையால் வழங்குனருக்கு விநியோகிக்கப்பட்டிருந்த கட்டளைகளுக்குரிய பொருட்கள் மற்றும் சேவைகள் மீளாய்வாண்டின் போது கிடைக்காமையால் 09 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதிஏற்பாட்டின் 18 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையான வீச்சளவில் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மூலதன செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதிஏற்பாடு போதியதாக இல்லையென கூறி குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடு, ஆணைச்சீட்டின் மூலம் ரூபா 10,000,000 தொகையான நிதிஏற்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. ஆண்டின் இறுதியில் உரிய செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமையால் நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(இ) இலங்கை கடற்படைக்கு 05 செலவின விடயங்களுக்குரித்தாக ஒதுக்கப்பட்டிருந்த நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் எஞ்சிய ரூபா 97,500,035 ஆல் மிகைத்து மிகைத்து பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

### 3.3 கட்டுநிதிக் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் செயற்பாடு நிறைவேற்றப்பட்டவுடன் பெற்றுக்கொள்ளப்பட்ட செயல் நிமித்த கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும், செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு 30 நாட்கள் மற்றும் 90 நாட்கள் வரையான காலதாமதத்தின் பின்னர் அச்செயல்நிமித்த கட்டுநிதி தீர்க்கப்பட்டிருந்தன.

(ஆ) ஏதேனும் செயற்பாடொன்றிற்காக செயல் நிமித்த கட்டுநிதி தேவையான அளவினை விட கூடுதலாக பெற்றுக்கொள்ளல் மற்றும் அவ்வாறு பெற்றுக்கொண்ட கட்டுநிதியைப் பயன்படுத்தாமல் வைத்திருந்து நீண்டகால தாமதத்திற்கு பின்னர் அச் செயல் நிமித்த கட்டுநிதி தீர்வு செய்யப்பட்டிருந்தது.

### 3.4 பொது வைப்புக் கணக்கு

2 வருடங்களைக் கடந்த ரூபா 3,232,175 ஆன 45 வைப்புகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

22301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்று தொடர்பாக தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9,669,257 ஆக இருந்ததுடன், அந் நிலுவை மீதிகள் 01 ஆண்டு முதல் 05 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்த போதிலும், அந்நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதின் பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலைமையில் காணப்பட்டது.

(ஆ) வழங்கப்பட்ட விசேட முற்பணக் கடன் தவணைகள் மற்றும் கடன் தவணை வட்டி அறவீடு என்பவற்றை பதிவு செய்வதற்காக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.6 களஞ்சிய முற்பணக் கணக்கு

மீளாய்வாண்டில் கடற்படையால் களஞ்சிய முற்பணக் கணக்கொன்றின் நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருந்தன. கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அக்கணக்குகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நாணயக் கடிதக் கணக்கின் மீதி ரூபா 7,053,510 மற்றும் அட்டுறு நாணயக் கடிதக் கணக்கின் மீதி ரூபா 6,896,612 ஆக இருந்தமையால் ரூபா 156,898 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன், உரிய வேறுபாட்டிற்கு காரணங்கள் என்னவென்பது தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு களஞ்சிய முற்பணக் கணக்கு (வெடி பொருட்கள்) வருமானக் கணக்கிற்கு இணங்க வருமானம் ரூபா 107,010,874 ஆக இருந்ததுடன், களஞ்சிய முற்பணக் கணக்கின் தேறிய வருமானம் ரூபா 108,673,320 ஆனமையால் ரூபா 1,662,446 ஆன வேறுபாடு என்னவென்பது கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.7 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.7.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2015 ஆம் ஆண்டிற்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று இலங்கை கடற்படையால் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், செயல்நடவடிக்கைத் திட்டமொன்றில் இருக்க வேண்டிய அடிப்படை தேவையான செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் வருடாந்த பாதீட்டு நிதிஏற்பாடு ஒவ்வொரு செயற்பாடுகளுக்கு இடையே பயன்படுத்தப்பட்டுள்ள முறை அதில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றுவதன் செயன்முன்னேற்றம் காண்பிக்கப்படும் செயன்முன்னேற்ற அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.7.2 கொள்வனவுத் திட்டம்

2015 ஆம் ஆண்டிற்காக வருடாந்த கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், கொள்வனவு அட்டவணையொன்று தயாரிக்கப்படாதிருந்தமையால் அது செயற்படுத்தப்பட்ட திட்டமொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.7.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

2009 யூன் 09 ஆந் திகதிய DMA/09/01 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டு காலாண்டிற்கு ஒன்று வீதம் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், 2015 ஆம் ஆண்டின்போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் 03 கூட்டத் தடவைகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

## 3.8 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டிற்குட்பட்ட சொத்துக்கள்

இலங்கை கடற் படையின் வாகன அணியில் 78 வாகங்கள் நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில் காணப்பட்டதுடன், அதில் 06 வாகனங்கள் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் 02 வாகனங்கள் 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் 11 வாகனங்கள் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் நிறுத்தப்பட்ட நிலையில் காணப்பட்டன.

### (ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ் அறிக்கை 2016 மார்ச் 17 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் இலங்கை கடற்படையின் பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2016 மே 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### (இ) வெளித் தரப்பினர்களிற்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

இலங்கை கடற் படையினால் சில சொத்துக்கள் முறையற்ற விதத்தில் வெளித் தரப்பினர்களிற்கு விடுவிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சொத்துக்களின் வகை | சொத்துக்கள் வழங்கப்பட்டுள்ள நிறுவனங்கள் | பெறுமதி | காலப்பகுதி |
|---|---|---|---|
| | | ரூபா | |
| மோட்டார் வாகனம் 01 | பாதுகாப்பு அமைச்சு | 8,249,999 | 2011 முதல் |
| மோட்டார் வாகனங்கள் 03 | பாதுகாப்பு அமைச்சு | 7,636,973 | 2015 முதல் |
| மோட்டார் வாகனம் 01 | பாதுகாப்பு சேவைக் கல்லூரி | 3,477,402 | 2012 முதல் |
| மோட்டார் வாகனம் 01 | பாதுகாப்பு சேவைக் கல்லூரி | 1,850,000 | 2015 முதல் |
| நீர் மூழ்கிக் கப்பல் 01 | வட மாகாண ஆளுனர் அலுவலகம் | 28,572,353 | 2015 முதல் |

**(ஈ) கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்**

இலங்கை கடற்படையினால் ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான பின்வரும் சொத்துக்கள் முறையற்ற விதத்தில் கையேற்கப்படாமல் மீளாய்வாண்டின் போது இலங்கை கடற்படையின் செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தன.

| | **சொத்துக்களின் வகை** | **அலகுகளின் எண்ணிக்கை** | **பெறுமதி** |
|---|---|---|---|
| | | | ரூபா |
| (i) | காணி (ஏக்கர்) | 182 | 588,730,600 |
| (ii) | கட்டிடங்கள் | 82 | 155,052,670 |
| | கட்டிடங்கள் | 174 | பெறுமதி மதிப்பிடப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | மோட்டார் வாகனங்கள் | 62 | 427,752,330 |
| | மோட்டார் வாகனங்கள் | 33 | பெறுமதி மதிப்பிடப்பட்டிருக்கவில்லை. |

## 3.9 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கை கடற்படையால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றவையாகும். அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) கொள்வனவு வழிகாட்டல்கள் நடைமுறையிலிருந்து விலகுதல்

இலங்கை கடற்படையால் மேற்கொள்ளப்பட்டிருந்த கொள்வனவு தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 3.4.1 (அ) ஆம் வழிகாட்டலுக்கு முரணாக வழங்கப்பட்டிருந்த ஒரு கூறுவிலை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு இலங்கை கடற்படைக்காக ரூபா 720,226 தொகையான "பெயாரீன் ஹீட்டர்" (Bearing Heater) கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 8.9.1 (ஆ) வழிகாட்டலின் பிரகாரம் ரூபா 500,000 இனை விஞ்சிப் பொருட்களின் கொள்வனவு தொடர்பாக முறையான ஒப்பந்தமொன்று கைச்சாத்திட வேண்டிய போதிலும், ரூபா 2,867,130 பெறுமதியான Bronze Holow Shaft கொள்வனவின் போது வழங்குனருடன் முறையான உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 5.3.11 (ஆ) (iii) ஆம் வழிகாட்டலின் பிரகாரம் ரூபா 2,204,991 ஆன ஒப்பந்தத்திற்காக ஒப்பந்தக்காரரிடம் கேள்வி பிணை முறி பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட பொருட்கள் இலங்கை கடற்படைக்கு கிடைப்பதற்கு முன்னரே காசோலை எழுதுதல் மற்றும் வழங்குனருக்கு காசோலைகளை வழங்கும் முன்பண கொடுப்பனவு அனுப்புகை முறைமை முழுமையான தவறான முறைமையொன்றனவும், அக்கொடுக்கல் வாங்கல்கள் முறைமையை திருத்துமாறு 2011 யூன் 11 ஆந் திகதி இடம் பெற்ற அரசாங்க கணக்குகள் தொடர்பான குழுக் கூட்டத்தின் போது கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், அந்நியதிகளுக்கு முரணாக 2011 யூலை மாதத்திலிருந்து 2015 திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் அம்முறைமை பயன்படுத்தப்பட்டு 8653 சந்தர்ப்பங்களில் ரூபா 2,729,523,290 செலவிடப்பட்டு பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ii) இலங்கை கடற்படையால் வெளித்தரப்பினருக்கு வழங்கப்படுகின்ற சேவைகளுக்கிடையே கடற்படை நலன்புரி செயற்திட்ட நிதியத்தின் மூலம் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 1,604 மில்லியன் கூட்டுத்தொகையும் மாலிமா உதவிச் சேவை மூலம் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 90 மில்லியன் கூட்டுத்தொகையும் இலங்கை கடற்படை நலன்புரி நிதியத்தின் மூலம் 2014 ஆம் ஆண்டில் ரூபா 113 மில்லியனும் சேகரிக்கப்பட்டிருந்தது. அவ்வருமானங்களில் ரூபா 710 மில்லியன் மாத்திரம் திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் எஞ்சிய ரூபா 1,097 மில்லியனையும் திரட்டு நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.10 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

(அ) கடற்படைக்குச் சொந்தமான ரூபா 1,577,792 பெறுமதியான 03 வாகனங்கள் காணாமல் போயிருந்த போதிலும், அத தொடர்பாக பொறுப்பு வாய்ந்த நபர்களை இனங்காண்பதற்கு இலங்கை கடற்படை தவறியிருந்தது.

(ஆ) இலங்கை கடற்படையின் மேல்மாகாண கட்டளை பகுதியில் இடம்பெற்றிருந்த ரூபா 300,000 பெறுமதியான 6600 லீற்றர் மண்ணெண்ணெய் முறைகேடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை நடவடிக்கைகளுக்காக தேவையான விலைப்பட்டியலின் மூலப்பிரதி காணாமல் போயிருந்த காரணத்தினால் அப்பரிசோதனை நடவடிக்கை நிறுத்தப்பட்டிருந்தது. அம்மூலப்பிரதி இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக பரிசோதனை நடவடிக்கைகள் 2016 ஆகஸ்ட் மாதம் அளவிலும் பரிசோதனை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு உரிய பொறுப்பு வாய்ந்த நபர்களை இனங்காண்பதற்கு இலங்கை கடற்படை தவறியிருந்தது.

(இ) இலங்கை கடற்படைக்கு ஜீ.ஐ.ஹெவிடியுட்ரி குழாய் கொள்வனவின் போது விதந்துரைப்புகளின் பிரகாரம் குறைந்த விலை விபரங்களைச் சமர்ப்பித்த வழங்குனரிடமிருந்து கொள்வனவு செய்யாமல் அதற்காக ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணமொன்று தெரிவிக்காமல் அதனை விட கூடிய கூறுவிலையொன்றைச் சமர்ப்பித்த வழங்குனரிடமிருந்து கொள்வனவு செய்த காரணத்தினால் ரூபா 84,672 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) கொள்வனவுச் செயற்பாட்டிற்காக அதிக காலமொன்று எடுக்கப்பட்டதன் காரணமாக இலங்கை கடற்படைக்கு ‘‘அன்கர் ரோட்’’ கொள்வனவின் போது மூன்று முறை கூறுவிலைகள் கோரப்பட்டிருந்தன. அக்காலப்பகுதியில் பொருட்களின் விலை அதிகரித்துச் சென்றமையால் ரூபா 781,340 கூடுதலாக செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது.

(உ) இலங்கை கடற்படையின் பராக்கிரம கடற்படை களஞ்சியத்திற்காக எழுதுகருவிகள் கொள்வனவின் போது உடன்படிக்கை செய்யப்பட்ட வழங்குனரிடமிருந்து கொள்வனவு செய்யாமல் சிறு காசுக் கட்டுநிதி (Rate Contract) மூலம் கொள்வனவு செய்யப்பட்டமையால் ரூபா 71,000 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. இதற்கான பதிலாக ‘‘பல்வேறு காரணங்கள் அடிப்படையில் உடன்படிக்கை செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் மூலம் ஒரே மாதிரி வழங்கல் இடம்பெறாமையால், எழுதுகருவி தேவைப்பாட்டை நிரப்புவதற்காக சில்லறைக் காசு கட்டுநிதி பயன்படுத்தப்பட்டதாக’’ கடற்படைத் தலைவரால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஊ) கேள்விச் சபையின் மூலம் வெள்ளை பச்சை அரிசி மற்றும் சிவப்பு பச்சை அரிசிக்காக ஒரு கிலோ கிராமிற்காக ரூபா 58 விலை செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், 1 கிலோகிராமிற்காக ரூபா 60 வீதம் வழங்குனருக்கு செலுத்தப்பட்ட காரணத்தினால் 62,475 கிலோகிராம் அரிசி இலங்கை கடற்படைக்கு வழங்குவதற்காக ரூபா 124,950 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

(எ) 2009 மே 24 ஆந் திகதி இலங்கை கடற்படையால் கம்பனியொன்றுக்கு திருத்த வேலைகளுக்காக கையளிக்கப்பட்டிருந்த 02 ஜீப் வண்டிகளின் திருத்த வேலைகள் தாமதித்த காரணத்தினால் துருப்பிடித்திருந்தமையால் ஏற்பட்ட நட்டத்தினை

அக்கம்பனியிடமிருந்து அறவிடுவதற்கு 2016 ஆகஸ்ட் மாதம் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---------------------------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் சில கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

(அ) இலங்கை கடற்படை கப்பல் தம்பபன்னி நிறுவனத்திற்குரிய நிலபெம்ம கடற்படை துணைப் பிரிவின் மின்சார வழங்கலுக்கான பட்டியல்கள் தீர்க்கப்படாமையால் 2013 திசெம்பர் 01 ஆந் திகதி முதல் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டிருந்தது. இத்துணை அலகின் மின்சாரப் பட்டியல் மாதமொன்றுக்கு ரூபா 20,000 அண்மித்த அளவொன்றாக இருந்தது. அக்கடற்படை துணைப் பிரிவிற்கு மின்பிறப்பாக்கி மூலம் நாளொன்றுக்கு 7 மணித்தியாலங்கள் மாத்திரம் மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக மாதமொன்றுக்கு ரூபா 60,000 அளவிலான பணம் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மின்பிறப்பாக்கி இயந்திரத்திற்கான எரிபொருள் மற்றும் பராமரிப்புச் செலவினமாக அக்கலாப்பகுதியில் ரூபா 1.2 மில்லியனிற்கு அண்மித்த தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு 30 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், அம்மின் இணைப்பை மீளப்பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கடற்படை 2015 சனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் 20 மின்சாரப் பட்டியல்களுக்காக நிர்ணயிக்கப்பட்ட திகதியில் பணம் செலுத்தப்படாததன் காரணமாக மாதாந்த மின்சாரப் பட்டியலுக்கு மேலதிகமாக ரூபா 174,045 ஆன தண்டப் பணமொன்றை செலுத்த நேர்ந்திருந்தது. அவ்வாறே கடந்த 4 ஆண்டு காலப்பகுதியில் ரூபா 29 மில்லியனுக்கு மேற்பட்ட தொகையொன்று தண்டப்பண வட்டியாக செலுத்தப்பட்டிருந்தது.

**3.12 முகாமைத்துவ பலவீனங்கள்**

---------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை கடற்படைக்குச் சொந்தமான 636 படகுகளும் 143 கப்பல்களும் செயற்பாடற்றுக் காணப்பட்டன. அப் படகுகள் மற்றும் கப்பல்களில் 86 மில்லியன் அ.டொ. செலுத்தி கொள்வனவு செய்யப்பட்ட 39 படகுகளும் கப்பல்களும், ரூபா 558 மில்லியன் செலுத்தி கொள்வனவு செய்யப்பட்ட 100 படகுகளும் கப்பல்களுமாக இருந்தன. இக் படகுகளையும் கப்பல்களையும் திருத்தம் செய்யப்படாமையால் சிதைவடைந்து செல்லக்கூடிய ஆபத்தொன்று காணப்பட்ட போதிலும், அதற்காக முன்னுரிமை அளிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு திருத்தியமைத்தல் மூலம் படகுகள் மற்றும் கப்பல்களை நல்ல நிலைமைக்கு கொண்டு வராமல் 2013 ஆம் ஆண்டின் போது 133.10 மில்லியன் அ.டொ. கிரயத்தில் இரண்டு பாதுகாப்பு படகுகள் கடன் அடிப்படையில் கொள்வனவு செய்வதற்கு இந்திய கம்பனியொன்றுடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2016 ஆகஸ்ட் மாதம் வரை அதற்காக 66.55 மில்லியன் அ.டொ. (ரூபா 8,800 மில்லியன்) செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2016 ஆகஸ்ட் மாதம் இறுதி வரையிலும் இவ்விரண்டு படகுகளும் இலங்கை கடற்படைக்கு கிடைத்திருக்கவில்லை.

(ஆ) இலங்கை கடற்படையின் இயலளவு அபிவிருத்திக்காக (பயிற்சியளித்தல்) செலவிடப்பட்டிருந்த ரூபா 710 மில்லியன் இலங்கை கடற்படையின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக திட்டமிடப்பட்டும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்தப்படாமல் இருந்தமை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் பயிற்சி பிரிவின் மூலம் தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த செயலாற்றல் அறிக்கையை பரீட்சித்த போது அவதானிக்கப்பட்டது.

(இ) இலங்கை கடற்படைக்குச் சொந்தமான 02 வாகனங்களை திருத்துவதற்காக வெளி நிறுவனமொன்றுக்கு கையளிக்கப்பட்டு ஓராண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், அவற்றின் திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு மீண்டும் கடற்படைக்குப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வட மத்திய கடற்படை கட்டளையின் பொறியியலாளர் வேலைத்தளத்தில் 22 Turbo Charges திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்காமல் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக இந்த Turbo Charges பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலைமைக்கு உட்படுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) வட மத்திய கடற்படை கட்டளையின் உதிரிப் பாகங்கள் பகிர்ந்தளிக்கும் நிலையத்தினுள் ரூபா 973,318 பெறுமதியான 141 உதிரிப்பாக விடயங்கள் நீண்டகாலமாக விநியோகிக்கப்படாமல் காணப்பட்டன.

## 3.12 மனித வள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

**சிவில் பதவியணி**

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 06 | 05 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை | 10 | 04 | 06 |
| (iii) | இரண்டாம் நிலை | 145 | 66 | 79 |
| (iv) | ஆரம்ப நிலை | 1768 | 1633 | 135 |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 290 | 243 | 47 |
| | மொத்தம் | 2219 | 1951 | 268 |

**சீருடைப் பதவியணி**

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| உத்தியோகத்தர்களும் கடற்படையினரும் | 51,423 | 53,056 | 4,885 | 6,518 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டது.

ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட மிகை ஊழியர் எண்ணிக்கை தொடர்பாக முறையான அங்கீகாரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கை கடற்படை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) முறையற்ற விதத்தில் ஏனைய தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்**

இலங்கை கடற்படையினால் மீளாய்வாண்டின் போது ஏனைய தரப்பினருக்கு முறையற்ற விதத்தில் விடுவிக்கப்பட்ட மனித வளங்கள் தொடர்பான விபரமொன்று கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| ஊழியர் வகை | எண்ணிக்கை | ஏனைய தரப்பினர் | விடுவிக்கப்பட்டிருந்த காலப்பகுதி |
|---|---|---|---|
| உத்தியோகத்தர்கள் | 03 | ஊடக கேந்திரம், அரச பாதுகாப்பு அமைச்சு | 2005 ஆம் ஆண்டிலிருந்து |
| கடற்படையினர் | 16 | | |
| கடற்படையினர் | 05 | ரணவிரு அதிகாரசபை | 2009 ஆம் ஆண்டிலிருந்து |
| உத்தியோகத்தர்கள் | 02 | இலங்கை நில மீட்டல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம் | 2011 ஆம் ஆண்டிலிருந்து |
| கடற்படையினர் | 01 | | |
| உத்தியோகத்தர்கள் | 05 | சிவில் பாதுகாப்புத் திணைக்களம் | 2009 ஆம் ஆண்டிலிருந்து |
| கடற்படையினர் | 02 | | |